## மொனறாகலை பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மொனறாகலை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) திவிநெகும திணைக்களத்தில் இருந்து மீளாய்வாண்டு நவம்பர் 17 திகதி வழங்கியிருந்த Laksteel வகையான 824 கல்வனய்ஸ் குழாய்களின் பெறுமதியான ரூபா 912,285 தொகையினை கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 2,697,630 தொகை தொடர்பாக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சேர்ப்புப் பதிவேட்டின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 1,169,802 தொகை எனினும் ரூபா 947,955 தொகை என ரூபா 221,847 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

1989 மற்றும் 1990 ஆகிய ஆண்டுகளின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கடைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,872,912 தொகையினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 49,360,244 இற்கான 05 சொத்து விடயங்களையும் ரூபா 5,590,339 இற்கான 02 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| 571(3) | ரூபா 5,590,339 இற்கான செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை | |
| அத்தியாயம் XXIV பிரிவு 1.6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றிய, கடமையை விட்டு சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள, இறந்துள்ள 34 அலுவலர்களிடம் அறவிடப்பட்ட வேண்டியிருந்த ரூபா 412,998 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 15,709,693 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,547,735 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 10,161,958 ஆகும்.

2.2 வருவான நிருவாகம்

-------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 47,446,384 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

-------------

(அ) 2013 ஆண்டு தொடர்பாக 24 ஆம் இலக்க மாட்டிறைச்சி கடை வாடகை கொடுத்தது தொடர்பாக கிடைக்க வேண்டிய பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 165,955 தொகையும், நிலுவை வாடகை ரூபா 1,107,132 தொகையும் தாமதக் கட்டணமாக ரூபா 2,992,961 தொகையும் உட்பட ரூபா 4,266,048 இற்கான தொகை ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டு தொடர்பாக 24 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 178,613 இற்கான தொகையொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 55 கடைகளில் 14 கடைகளுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் செலுத்தும் ஆரம்ப வைப்புப் பணம் ரூபா 2,106,875 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான மூன்று ஆதனங்களில் இருந்து கடந்த பல வருடங்களில் பல சந்தர்ப்பங்களில் வாடகைக்கு கொடுப்பதற்காக கேள்வி கோறப்பட்டிருந்த போதும் கேள்விகள் சமர்பிக்கப்படாமையால் ரூபா 2,282,914 இற்கான வருமானம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இவ்வாறு வாடகையாளர்கள் முன்வராத ஆதனங்களை வாடகைக்கு கொடுப்பதற்கு சபையினால் மாற்றுச் செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 செலுத்துகை டவர் கட்டணம்

---------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு கம்பனிகளினால் 2005 முதல் 2012 ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்டிருந்த 12 செலுத்துகை டவர்களில் இருந்து வருடாந்த வாடகை ஒன்றினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானங்கள்

(அ) 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது மோட்டார் கிடேரர் இயந்திரம் வெளி நபர்கள் பத்து பேருக்கு வாடகை அடிப்படையில் சேவை வழங்கியது தொடர்பாக அறிவிடப்பட வேண்டியிருந்த ரூபா 206,263 இற்கான தொகை ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அங்கீகரித்துள்ள ஹோட்டல்கள் தங்குமிடங்களில் குறிப்பிட்டு ஆண்டிற்கு முன்னைய வருடத்தின் பெறுவனவுகளில் நூற்றிற்கு ஒன்றினை மிகைக்காத கட்டணம் ஒன்று துணைவிதி அமைக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் மூன்று ஹோட்டல்கள் / தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகை பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் | 1,131,182 |
| முத்திரை கட்டணம் | 2,416,692 |

2.3 மிகை விதிப்புக்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 922,195 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

செயற்பாட்டு திறமையின்மை

உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் ரூபா 220,800 பெறுமதியுடைய 20 லீட்டர் அளவுடைய 800 குப்பை பாத்திரங்கள் 2013 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த குப்பை பாத்திரங்களினால் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2015 மே 22 திகதி வரை களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்